சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.கே. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2025 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் மாசித் திங்கள் 17 ஆம் நாள்)

அசல் வழக்குஎண்.57/2023

CNR.No. TNCB1900002072023

1. திருமதி.மகாலட்சுமி, வயது 42 வருடங்கள், க/பெ. ஆர்.ரவி, வசிப்பிட முகவரி கதவு எண் .2/154, தண்ணீர் பந்தல் , மங்கர்சவளயாபாளையம், சேவூர் அஞ்சல் , அவினாசி தாலூக்கா, திருப்பூர் மாவட்டம் - 641 655.

2. திருமதி. நாகரத்தினம், வயது 52 வருடங்கள், க/பெ, நடராஜ், வசிப்பிட முகவரி கதவு எண்.3/1 ஏ, விநாயகர் கோவில் வீதி, வெள்ளியங்காடு - 641104, மேட்டுப்பாளையம் தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம் . .... வாதிகள்

-இடையே-

1. திரு.காந்தி சுப்பையன், வயது சுமார் 77, த/பெ. ராமசாமி கவுடர், வசிப்பிட முகவரி கதவு எண்.151, கே.கே. நகர், காரமடை ரோடு, மேட்டுப்பாளையம் - 641 301, கோயமுத்தூர் மாவட்டம்.

2. திருமதி.ரமாபிரபா, வயது சுமார் 35, க/பெ. ஜெயகுமார், வசிப்பிட முகவரி கதவு எண்.8, டேங்க் வீதி, சென்னனூர், தென்கரை, கோயமுத்தூர் - 641 101.

3. திருமதி.லட்சுமி பிரியா ,வயது சுமார் 35 வருடங்கள், க/பெ. மகேந்திரன், வசிப்பிட முகவரி கதவு எண் .152 ஜேஏ, கே.கே. நகர், காரமடை ரோடு , மேட்டுப்பாளையம் - 641 301, கோயமுத்தூர் மாவட்டம்.

4. திரு.பத்திரசாமி, வயது சுமார் 60, த/பெ. ஈஸ்வர கவுடர், வசிப்பிட முகவரி கதவு எண்.8/131, ஜடையம்பாளையம் புதூர், சிறுமுகை - 641 302, கோயமுத்தூர் மாவட்டம்.

5. திரு.வேலுசாமி, வயது சுமார் 56 வருடங்கள், த/பெ. ஈஸ்வர கவுடர், வசிப்பிட முகவரி கதவு எண் .14 கே, நடுர் லைன் -3, கண்ணப்பன் லேயவுட், மேட்டுப்பாளையம் -

641301, கோயமுத்தூர் மாவட்டம்.

6. திரு. ஜம்புலிங்கம், வயது சுமார் 53, த/பெ. ஈஸ்வர கவுடர், வசிப்பிட முகவரி கதவு எண் .8/131, ஜடையம்பாளையம் புதூர் , சிறுமுகை - 641 302, கோயமுத்தூர் மாவட்டம் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது தாவா சொத்துக்களை 3 சரிபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிகளுக்கும் கூட்டாக ஒதுக்கியும் கடந்த 30.06.2020 அன்று 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய எண் .4482/2020 தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றும் அதேபோல் கடந்த 04.02.2021 அன்று 1ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய எண் .4536/2021 தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கல்ல என்றும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் . 1ம் பிரதிவாதி கடந்த 22.11.2016 ல் மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.190/2016 -ல் மோசடியாக பெறப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை ஆகியவை செல்லத்தக்கவை அல்ல எனற பரிகாரமும் மேலும் வழக்கின் செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்குமாறும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் - 17.02.2023

வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் - ஜடையம்பாளையம் கிராமம் , மேட்டுப்பாளையம் தாலூக்கா, நீதிமன்றத்தின் ஆள்வரை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் 03.10.1977, 22.11.2016, 30.06.2020, 04.02.2021, 14.07.2022, 12.01.2023 ஆகிய தேதிகளிலும் அதன் பின்னிட்டும் ஏற்பட்டுள்ளது.

வழக்கு மதிப்பீட்டு விபரம் - நீதிமன்ற ஆள்வரை மற்றும் நீதிமன்ற கட்டணத்தின் பொருட்டு வழக்கு மதிப்பு ரூ .3,15,000/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கு மதிப்புச் சட்டம் பிரிவுகள் 37(2), 25(d)-ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.5,450/- செலுத்தப்பட்டுள்ளது.

## DETAILS OF VALUATION

a) for Partition :

| | | | |
|---|---|---|---|
| Market value of suit properties | .. | Rs.9.00.000/- | |
| Value of 1/3 share of plaintiff | ... | Rs.3,00,000/- | |
| Fixed Court Fee paid | | ... | Rs.5.000/- |

(aa) for Declaration :

| | | | |
|---|---|---|---|
| Value for prayer (aa) declaring the Decree and Judgement passed in O.S.No.190/2016 on 22.11.2016 by District Munsif cum Judicial Magistrate, Mettupalayam as null and void. | ... | Rs. 5.000/- | |
| Court fee paid | | ... | Rs. 150/- |

(b) for Declaration :

| | | | |
|---|---|---|---|
| Value for prayer b) declaring Regd.Gift Settlement Deed dated 30.06.2020 under Regn.No. 4482/2020 as null and void | .. | Rs. 5,000/- | |
| Court fee paid | | ... | Rs. 150/- |

c) for Declaration:

| | | | |
|---|---|---|---|
| value for prayer c) decaring Regd.Gift Settlement Deed dated.04.02.2021 under Regn.No. 4536/2021 as null and void | ... | Rs. 5,000/- | |
| Court fee paid | | ... | Rs. 150/- |

---

| | | | |
|---|---|---|---|
| Total Value | - | Rs.3,15,000/- | |
| Total Court fee paid | | - | Rs.5,450/- |

---

(Amended as per order in I.A.No.2 of 2023 dated 22.01.2024)

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு . ஆர்.சாந்தமூர்த்தி. அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு . எம். ஹரிகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும் 2 முதல் 6 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதிகள் தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. தாவா வழக்கு அனுமதிக்கப்பட்டு தாவா சொத்துக்களை பொறுத்து 3 சரிசமபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிகளுக்கு கூட்டாக ஒதுக்கி தீர்ப்பளிக்கப்படுகிறது,

2. மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.190/2016 ல் கடந் 22.11.2016 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இல்லாநிலையது எனவிளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் பெயருக்கு கடந்த 30.06.2020 அன்று இயற்றி கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.4482/2020 ஆனது இல்லாநிலையது என விளம்புகை செய்து தீாப்பளிக்கப்படுகிறது.

4. 1 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியின் பெயருக்கு கடந்த 04.02.2021 அன்று இயற்றி கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.4536/2021 ஆனது இல்லாநிலையது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

5. இருதரப்பின் உறவுமுறையை கருத்தில்கொண்டு வழக்கின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள

வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

<u>செலவுத் தொகை பட்டியல்</u>

| வாதிகள் தரப்பில் | | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|---|
| தாவாவிற்கு கட்டணம் | - ரூ,5,450/- | - இல்லை - |
| வக்காலத்துக்கு கட்டணம் | - ரூ. 10/- | |
| கட்டளைதாரர்க்கு கட்டணம் | - ரூ. 20/- | |
| நாளிதழ் விளம்பர கட்டணம் | - ரூ. 20/- | |
| வழக்கறிஞர் கட்டணம் (சீ) | - ரூ.2,000/- | |
| | --------------------- | |
| Cost Certified | - ரூ.7500/- | |
| | --------------------- | |

<u>சொத்து விபரம்</u>

<u>அயிட்டம் 1:</u>

கோயம்புத்தூர் ரிடிடு , மேட்டுப்பாளையம் சப்ரிடிடு , அவினாசி தாலூக்கா, ( தற்பொழுது மேட்டுப்பாளையம் தாலூக்கா ) ஜடையம்பாளையம் கிராமம் க.ச.எண்.188/1 பு.ஏக்.2.67 க்குத் தீர்வை ரூ.2.99-ல் மேபுறம் தென்வடல் நீளியாக சி.டி.ஷெட்யூல்தாரர்களின் ( காந்தி சுப்பையன் மற்றும் ருக்மணி ) பாக பூமிகளுக்கும் மேற்கு மேற்படி ஏ ஷெட்யூல் பாகத்துக்கும் ( கீழ் கண்ட அயிட்டம் 2) B ஷெட்யூல் (கந்தசாமி) பாகத்துக்கும் கிழக்கு க .ச.எண்.191-ல் கிழமேல் இட்டேரிக்கும் தெற்கு க.ச.எண்.187/1 வாரி பூமிக்கும் வடக்கு இதன் சதுர்மத்தியில் உள்ள விஸ்தீரணம் ஏக்.0.60 சென்ட்டுக்கு தீர்வை 0.67

இதன் தற்கால மார்க்கெட் மதிப்பு ரூ.4,00,000/-

<u>அயிட்டம் 2:</u>

பின்னும் மேற்படி கிராமம் க .ச.எண்.192/2 பு.ஏ.1.45 க்குத் தீாவை ரூ.1.62-ல் கிழபுரம் தென்வடல் நீளியாக பி ஷெட்யூல்தாரர் ( கந்தசாமி) பாகத்துக்கும் கிழக்கு ஏ ஷெட்யூல்தாரர் (மேலே கண்ட அயிட்டம் 1) பாகத்துக்கும் மேற்கும்

வடக்கும் க.ச.எண்.191 காலையில் கிழமேல் இட்டேரிக்கும் தெற்கு இதன் சதுர்மத்தியில் உள்ள ஏக்.0.50 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமி.

இதன் தற்கால மார்க்கெட் மதிப்பு ரூ.3,50,000/-

<u>அயிட்டம் 3:</u>

க.ச.எண்.216-ல் அதாவது ஜடையம்பாளையம் புதூரில் உள்ள ஏக் .0.04 சென்ட் இடத்திலுள்ள 3 அங்கண வில்லை வீடு ஒன்றும் அதை சேர்ந்த காலி இடம் இதற்கு செக்குபந்தி விபரம் ஊமத்தூரகவுடர் வீட்டிற்கு கிழக்கு மேற்படி மாதையன் வீட்டுக்கு வடக்கு ராமப்பன் , மாதையன், பத்திரப்பன், சுப்பையன் இவர்கள் பாகத்துக்கு மேற்கு பள்ளவாரிக்கு தெற்கு.

இதன் தற்கால மார்க்கெட் மதிப்பு ரூ.1,50,000/-

2025 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 01 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,